# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1892/35 - 2014 දෙසැම්බර් මස 10 වැනි බදාදා - 2014.12.10

*1892/35 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மோட்டார் வாகன நியதிச் சட்டம்*
தொடர்பான அறிவித்தல்

*1991 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மோட்டார் வாகன நியதிச் சட்டத்தின் 129 (1) ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம், உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, வீட்டுப் பொருளாதார மேம்பாடு, கடற்றொழில், கிராம அபிவிருத்தி, உல்லாசத்துறை, முதலீட்டு மேம்பாட்டு இணைப்பு அத்துடன் விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சரினால் அமுல்படுத்தப்படும் கட்டளைகள்.*

அன்டனி நிமல் லான்சா வர்ணகுலசூரிய,
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம்,
உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, வீட்டுப்
பொருளாதார மேம்பாடு, கடற்றொழில், கிராம அபிவிருத்தி, உல்லாசத்துறை,
முதலீட்டு மேம்பாட்டு இணைப்பு அத்துடன் விலங்கு உற்பத்தி மற்றும்
அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சர்
மேல் மாகாணம்.

கொழும்பு,
*2014, நவெம்பர் 04.*

**கட்டளை**

இக்கட்டளை மோட்டார் வாகன நிலுவைக் கட்டணங்களுக்குரிய தண்டப் பணத்திற்காக சலுகைகளை வழங்கும் கட்டளை என அழைக்கப்படுவதுடன் 2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.03.31 ஆந் திகதி வரை மாளிகாவத்தை மோட்டார் வாகனப் போக்குவரத்து மாகாண ஆணையாளர் காரியாலயம் மற்றும் மேல் மாகாணத்தின் பிரதேச செயலாளர் காரியாலய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

இறைவரி அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்துவது நிலுவையாகக் கொண்டுள்ள வாகன உரிமையாளர்கள் அவ்வாறு நிலுவையாகக் காணப்படும் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 2015, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2015, மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் செலுத்தினால் அந்த அனுமதிப்பத்திரதாரர்களுக்கு பின்வரும் அதாவது:-

1. மாகாண சபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் (1991) காலத்தினுள் சேர்ந்துள்ள நிலுவை மற்றும் தண்டப்பணத்தினை வெட்டிவிடுதல்.

2. உரிமையாளரின் பாவனையில் இருந்து விலகி, சுங்கம், பொலிஸ், நீதிமன்றம் ஆகியவற்றின் பொறுப்பில் இருந்த குறிப்பிட்ட காலத்திற்கு நிலுவை மற்றும் தண்டங்களில் இருந்து விலக்களித்தல், (உரிமையாளர் தவறிழைக்காத சந்தர்ப்பம் ஒன்றில் மட்டும்).

3. வடக்கு – கிழக்கு யுத்தத்தின் காரணமாக காணாமற்போய் மீண்டும் நீதிமன்றத்தின் மூலம் விடுவிக்கப்பட்ட வாகனங்களின் பொலிஸ் அல்லது நீதிமன்றத்தின் பொறுப்பில் இருந்த காலத்திற்கு உரிய நிலுவை வருமானத்தை விலக்களித்தல்.

4. நீண்டகாலமாக இறைவரி அனுமதிப்பத்திரம் ஒன்று காணப்படாத ஏனைய வாகனங்களுக்குரிய தண்டப்பணத்திற்கு சலுகையளித்தல்.

4.1 நடைமுறை வருடத்தை தவிர 05 வருடங்கள் வரை இறைவரி அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளாத வாகனங்களுக்காக அறவிடப்பட வேண்டிய தண்டப் பணத்தில் 50% விலக்களித்தல்.

4.2 நடைமுறை வருடத்தை தவிர ஐந்து வருடம் வரை இறைவரி அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக்கொள்ளாத வாகனங்களுக்காக ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காலத்தினை முழுமையாக வெட்டி விடுதல்

போன்ற சலுகைகள் உரித்தாகும்.

2015.04.01 ஆந் திகதி அளவில் நிலுவை மற்றும் தண்டப் பணத்தினைச் செலுத்தாத வாகனங்கள் காணப்பட்டால் அவ் வாகனங்கள் தொடர்ந்தும் மேல் மாகாணத்தில் காணப்படுகின்றனவா என பௌதீக ரீதியில் பரிசோதனை செய்வது இடம்பெறுவதுடன் அவ்வாறு பரிசோதித்துப் பார்க்க மேல் மாகாணத்தின் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அல்லது மேல் மாகாணத்தின் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர்/ பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் ஒருவருக்கு இங்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

இதற்கிணங்க அவ்வாகனங்கள் காணப்படுகின்றனவா எனக் கருதக்கூடிய எந்தவொரு இடத்திற்கும் உட்பிரவேசிக்க இங்கு அதிகாரம் கிடைக்கின்றது.

அன்டனி நிமல் லான்சா வர்ணகுலசூரிய,
போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகாரம், மகளிர் விவகாரம்,
உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, வீட்டுப்
பொருளாதார மேம்பாடு, கடற்றொழில், கிராம அபிவிருத்தி, உல்லாசத்துறை,
முதலீட்டு மேம்பாட்டு இணைப்பு அத்துடன் விலங்கு உற்பத்தி மற்றும்
அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சர்,
மேல் மாகாணம்.

12- 868

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.